காட்பாடி அருகே கட்டப்பட்டு வரும்

தேவாலய மேற்கூரை இடிந்து 3 தொழிலாளிகள் பலி

பொன்னை, செப். 11: வேலூர் மாவட்டம் காட்பாடி தாலுகா மந்தி கிருஷ்ணாபுரம் ஆந்திர மாநில எல்லையை ஒட்டிய பகுதியில் புதிய தேவாலய கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது. நேற்று மாலை தேவாலயத்தின் மேற்கூரை கான்கிரீட் தளம் அமைக்கும் பணி நடந்தது. இதில் பெங்களூரை சேர்ந்த 15 தொழிலாளர்கள் மற்றும் 20 தமிழக தொழிலாளிகள் என 35 பேர் ஈடுபட்டனர். அப்போது அதிக பாரம் தாங்காமல் திடீரென 40 அடி உயரத்தில் இருந்த கான்கிரீட் தளம் பயங்கர சத்தத்துடன் சரிந்து விழுந்தது. இதில் பெங்களூரை சேர்ந்த ஜான்(40), இம்மானுவேல்(60), சாமுவேல் (40) உள்ளிட்ட 15 கூலித் தொழிலாளர்கள் சிக்கிக்கொண்டனர். தீயணைப்பு மற்றும் மீட்புப் படையினர், தமிழக, ஆந்திர போலீசார் மீட்புப் பணியில் இறங்கினர்.

நீண்ட நேர போராட்டத்திற்கு பிறகு காயமடைந்த 14 தொழிலாளர்களை மீட்டு மருத்துவமனைகளில் சேர்த்தனர். சாமுவேல் சடலமாக மீட்கப்பட்டார். வேலூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு போகும் வழியில் ஜான் என்ற தொழிலாளி பரிதாபமாக உயிரிழந்தார். தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட இம்மானுவேல் சிறிது நேரத்தில் இறந்தார். இதுகுறித்து வேலூர் கலெக்டர் லீலா அலெக்ஸ் கூறுகையில், ‘முறையான அனுமதி பெறவில்லை என்பது தெரிய வந்தால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்’ என்றார்.

தெற்கு இரயில்வே

சேலம் கோட்டம்
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
எண்.SA-TRD-2026-27-164 தேதி 09.09.2026

முதுநிலை கோட்ட மின்சார பொறியாளர் / ட்ராக்ஷன் மற்றும் விநியோக கிளை / சேலம் கோட்டம், சேலம்–5 அவர்கள், மேதகு இந்தியக் குடியரசுத் தலைவரின் சார்பிலும் அவருக்காகவும் எமது மின்னணு ஒப்பந்தப்புள்ளி வலைதளம் **www.ireps.gov.in** –ல் கொடுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பின்படி பின்வரும் பணிகளுக்காக ஆன்லைன் ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்கிறார். சேலம் கோட்டத்தின் பணிகளுக்கான மின்னணு ஒப்பந்தப்புள்ளிக்காக விண்ணப்பிக்க விரும்பும் ஒப்பந்தப்புள்ளியாளர்கள்/ஒப்பந்தக்காரர்கள், மின்னணு ஒப்பந்தப்புள்ளி வலைதளம் **www.ireps.gov.in**–ல் பதிவு செய்து கொள்ள வேண்டியது அவசியமாகும் .ஆன்லைன் ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே ஏற்கப்படும். மின்னணு ஒப்பந்தப்புள்ளியில் பங்கேற்க ஏதுவாக டிஜிட்டல் கையொப்ப சான்றிதழ்களை பெற வேண்டியது ஒப்பந்தப்புள்ளியாளர்கள் /ஒப்பந்தக்காரர்கள் பொறுப்பாகும்.

வ. எண்.	ஒப்பந்தப்புள்ளி எண்	பணி பற்றிய விவரம்
1.	**SA-TRD-2026-27-164**	சேலம் கோட்டத்திற்காக மின்சார ட்ராக்ஷன் விநியோகம் ஏற்பாடுகள் – CTR (P) – 23.187 Tkmக்கு மற்றும் சேலம் கோட்டத்திற்காக மின்சார ட்ராக்ஷன் விநியோகம் ஏற்பாடுகள் – TFR (பிளெய்ன் ட்ராக்) – 43.561 Tkm க்கு, TFR (P & C) –23 செட்கள் மற்றும் TBR – 83.52 Tkmக்கு

பணியின் தோராய மதிப்பு (₹ இலட்சத்தில்)	ஒப்பந்தப்புள்ளி படிவக் கட்டணம் ₹	பிணை வைப்பு தொகை ₹	பணியை முடிப்பதற்கான காலம்
35.18	0	70400	06 மாதங்கள்

வ.எண். 1–க்கு ஒப்பந்தப்புள்ளி மூடப்படும் தேதியும் 05.10.2026 அன்று 14.30 மணி

மேற்குறிப்பிட்ட ஒப்பந்தப்புள்ளி பற்றிய முழு விவரங்கள் , மின்னணு வலைதளம் **www.ireps.gov.in**–ல் கொடுக்கப்பட்டுள்ளன.

ஒப்ப புள்ளி சமர்ப்பித்தல் பற்றிய விவரங்களுக்கு காண்க **www.ireps.gov.in**

மேற்காணும் வலைதளம் மூலமாக கோரப்படும் ஒப்பந்தப்புள்ளிகளுக்கான ஆன்லைன் ஒப்ப புள்ளிகள் டிஜிட்டல் கையொப்பம் உடையவையாக இருத்தல் வேண்டும்.

முதுநிலை கோட்ட மின்சார பொறியாளர்,
ட்ராக்ஷன் விநியோகம், சேலம்

---

22 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



மறைவு: 11-9-2004

எங்களது தாயாரும்

திரு. **சாமிநாத நாயுடு** அவர்களின் துணைவியாருமான

திருமதி. **லெட்சுமி காந்தம்மாள்** அவர்கள்

எங்களை விட்டு பிரிந்தாலும் எங்கள்
இதயத்தில் நிறைந்து இருக்கின்றீர்.
என்றும் எங்களுடன் இருந்து வழிகாட்டும் உங்களுக்கு
எங்கள் மனம் நிறைந்த அஞ்சலி.

இங்ஙனம்

R.S. **ஜீவரத்தினம்** B.A., B.L,
R.S. **முனிரத்தினம்** Ex. MLA,
மகள்கள், மருமகள்கள், பேரன், பேத்திகள்

விசாரணைக்கு சென்ற கோயில் காவலாளி அஜித்குமார் அடித்துக்கொலை

டிஎஸ்பி, இன்ஸ்., உட்பட 4 போலீசார் கொலை வழக்கில் சிறையில் அடைப்பு

சிபிஐ கோரிக்கையை ஏற்று மதுரை நீதிமன்றம் அதிரடி

▶ கொலை வழக்கில் சிறையில் அடைக்கப்பட்ட டிஎஸ்பி சண்முகசுந்தரம், இன்ஸ்பெக்டர் ரமேஷ்குமார், எஸ்ஐ சிவக்குமார், ஏட்டு இளையராஜா

மதுரை, செப். 11: விசாரணைக்கு அழைத்து சென்று கோயில் காவலாளி அஜித்குமாரை அடித்துக் கொன்ற டிஎஸ்பி, இன்ஸ்பெக்டர் உட்பட 4 போலீசார் கொலை வழக்கில் சிறையில் அடைக்கப்பட்டனர்.

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகே மடப்புரம் கோயில் காவலாளி அஜித்குமாரை தனிப்படை போலீசார் நகை மாயமான வழக்கின் விசாரணைக்காக அழைத்து சென்றனர். அப்போது போலீசார், அஜித்குமாரை தாக்கியதில் உயிரிழந்தார். இதையடுத்து கொலை வழக்காக பதிவு செய்த சிபிஐ போலீசார், மானாமதுரை தனிப்படை போலீஸ்காரர்களான கண்ணன், ராஜா, ஆனந்த், பிரபு, சங்கரமணிகண்டன், தனிப்படை வேன் டிரைவர் ராமச்சந்திரன் ஆகியோரை கைது செய்து, மதுரை மத்திய சிறையில் அடைத்தனர். இவ்வழக்கு தொடர்பாக மதுரை ஐந்தாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் சிபிஐ தாக்கல் செய்த குற்றப்பத்திரிகையில், மானாமதுரை டி.எஸ்பியாக இருந்த சண்முகசுந்தரம், திருப்புவனம் இன்ஸ்பெக்டர் ரமேஷ்குமார், எஸ்ஐ சிவக்குமார், போலீஸ்காரர் இளையராஜா ஆகியோருக்கும் இந்தக் கொலையில் தொடர்பு இருப்பதாக கூறப்பட்டிருந்தது.

இந்த வழக்கின் விசாரணை மதுரை ஐந்தாவது கூடுதல் நீதிமன்றத்தில் தொடர்ந்து நடந்து வருகிறது. நேற்று நீதிபதி கே.தாமோதரன் முன் இவ்வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது மதுரை மத்திய சிறையில் உள்ள 6 பேரையும் போலீசார், பலத்த பாதுகாப்புடன் அழைத்து வந்து ஆஜர்படுத்தினர். மேலும், டிஎஸ்பி சண்முகசுந்தரம் உட்பட 4 பேரும் நீதிபதி முன் ஆஜராகினர். அப்போது சிபிஐ வழக்கறிஞர் விஜயன் ஆஜராகி, இந்த வழக்கில் 10 பேர் மீதான குற்றசாட்டுகளை விளக்கினார். இதை ஏற்க மறுத்த 10 பேரும் தாங்கள் வழக்கை எதிர்கொள்வதாக கூறினர்.

அப்போது சிபிஐ வழக்கறிஞர் விஜயன், “இந்த வழக்கில் 7வது குற்றவாளியாக சேர்க்கப்பட்ட டிஎஸ்பி சண்முகசுந்தரம், 8வது குற்றவாளி இன்ஸ்பெக்டர் ரமேஷ்குமார், எஸ்ஐ சிவக்குமார், ஏட்டு இளையராஜா ஆகியோர் மீது ஏற்கனவே கூட்டுச்சதி, சாட்சியங்களை கலைத்தல், சட்டவிரோதமாக தடுத்து வைத்தல் உள்ளிட்ட பிரிவுகளில் வழக்கு பதியப்பட்டிருந்தது, தற்போது இவர்கள் மீது இந்த குற்றசாட்டுகளுடன் கொலை குற்றத்திற்கான பிரிவும் சேர்க்கப்பட்டுள்ளது. இவர்கள் ஏற்கனவே ஐகோர்ட் மதுரை கிளையில் தாக்கல் செய்த முன் ஜாமீன் மனுக்கள் தள்ளுபடியானது. இவர்களை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்த வேண்டும். அவர்களிடம் விசாரணை நடத்த வேண்டியது அவசியம்’’ என்றார்.

இதையடுத்து மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர், 4 பேரும் தொடர்ந்து நீதிமன்றத்தில் ஆஜராகி வருகின்றனர். எனவே, அவர்களை நீதிமன்ற காவலில் வைக்க வேண்டாம் என வாதிட்டார். இதற்கு சிபிஐ தரப்பு வழக்கறிஞர் விஜயன், “குற்றச்சாட்டுகளின் தீவிரம், சம்பந்தப்பட்ட போலீசாரின் பதவிகள், சாட்சிகளை பாதிக்கும் வாய்ப்பு ஆகியவற்றை கருத்தில் கொண்டு இவர்களை நீதிமன்றக் காவலில் வைக்க வேண்டும். இந்த வழக்கின் முக்கிய சாட்சியான நவீன்குமார், உயிரிழந்த அஜித்குமாரின் சகோதரர், அவர் நேரில் பார்த்த சாட்சியும், காயமடைந்த சாட்சியும் ஆவார். அவருக்கு வழங்கப்பட்டிருந்த சாட்சி பாதுகாப்பு, திருப்புவனம் இன்ஸ்பெக்டர் சேதுமணி மாதவனால் வாபஸ் பெறப்பட்டுள்ளது. எனவே, 4 பேரையும் நீதிமன்ற காவலில் வைக்க வேண்டும்” என்றார்.

அனைத்து தரப்பு வாதங்களையும் பதிவு செய்த நீதிபதி தாமோதரன், “இவர்கள் 4 பேரும் சாதாரணமானவர்கள் அல்ல. காவல் துறையில் அதிகாரமிக்கவர்கள். டிஎஸ்பி அரசியல்வாதிகள் மூலம் பாதிக்கப்பட்ட தரப்பிடம் சமாதானமாக செல்ல முயன்றுள்ளார். தொலைபேசி உரையாடல் அடங்கிய ஆதாரங்களை அழிக்க முயன்றுள்ளனர். ஏற்கனவே அரசு ஆவணங்களில் போலியான பதிவுகளை உருவாக்கி குற்றத்தை மறைக்க முயன்றுள்ளனர். இந்த 4 பேரும் வெளியில் இருந்தால் சாட்சிகளை கலைக்கவும், ஆதாரங்களை அழிக்கவும் வாய்ப்பு இருப்பதாக இந்த நீதிமன்றம் கருதுகிறது. வழக்கின் தீவிரம், குற்றச்சாட்டுகளின் தன்மை, முக்கிய சாட்சிகளின் நிலை, காவல் நிலைய ஆவணங்களில் முறைகேடு செய்யப்பட்டதாக கூறப்படும் குற்றச்சாட்டு, ஆதாரங்களை சேதப்படுத்தியதாக கூறப்படும் தகவல்கள் மற்றும் சாட்சிகளை பாதிக்கும் வாய்ப்பு ஆகியவற்றை கருத்தில் கொண்டு, டிஎஸ்பி சண்முகசுந்தரம் உள்ளிட்ட 4 போலீசாரையும் செப்.16ம் தேதி வரை நீதிமன்றக் காவலில் வைக்க வேண்டும்’’ என உத்தரவிட்டார். இதையடுத்து 4 பேரும் மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

தூத்துக்குடி ஸ்டெர்லைட் துப்பாக்கிச்சூடு வழக்கில்

சிபிஐ பரிந்துரைப்படியே அதிகாரிகள் மீதான நடவடிக்கை கைவிடப்பட்டது

ஐகோர்ட் மதுரை கிளையில் தமிழ்நாடு அரசு தகவல்

மதுரை, செப். 11: தூத்துக்குடி ஸ்டெர்லைட் துப்பாக்கிச்சூடு வழக்கில் சிபிஐ பரிந்துரையின் பேரிலேயே அதிகாரிகள் மீதான நடவடிக்கை கைவிடப்பட்டதாக ஐகோர்ட் கிளையில் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மதுரையைச் சேர்ந்த கதிரேசன் உள்ளிட்டோர், ஐகோர்ட் மதுரை கிளையில் கடந்த 2018ல் தாக்கல் செய்த மனுவில், தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையை மூடக் கோரி போராட்டம் நடத்திய பொதுமக்கள் மீது போலீசார் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 13 பேர் பலியாகினர். இந்த துப்பாக்கிச்சூட்டிற்கு காரணமான அரசு அதிகாரிகள் மற்றும் காவல் துறையினர் மீது குற்றவியல் வழக்குப்பதிவு செய்ய வேண்டும் என கூறியிருந்தனர்.

இந்த மனுக்கள் நீதிபதிகள் சி.வி.கார்த்திகேயன், சக்திவேல் ஆகியோர் முன் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது அரசு தலைமை வழக்கறிஞர் விஜய் நாராயண் ஆஜராகி, “துப்பாக்கிச்சூடு தொடர்பாக, விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட ஓய்வு பெற்ற நீதிபதி அருணா ஜெகதீசன் அறிக்கை கடந்த ஆட்சியின்போது ஏற்றுக்கொள்ளப்பட்டது. சிபிஐ பரிந்துரையின் அடிப்படையில், துப்பாக்கிச்சூட்டில் தொடர்புடைய அதிகாரிகள் மீதான துறைரீதியான நடவடிக்கை கைவிடப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டோருக்கு ரூ.50 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும் என நீதிபதி ஆணையம் தெரிவித்துள்ளது. ரூ.25 லட்சம் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. ஆணையத்தின் பரிந்துரைகளை, அப்படியே அமல்படுத்த வேண்டும் என்பது சட்டபூர்வமான கடமை கிடையாது” என்றார்.

மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜராகி, “ஏழு வருடங்களுக்கு மேல் வழக்கு விசாரணையை சிபிஐ இழுத்தடித்துக் கொண்டிருக்கிறது. சிபிஐ மீது நீதிமன்றம் தாமாக முன்வந்து நீதிமன்ற அவமதிப்பு வழக்கு பதிய வேண்டும். சிபிஐ தரப்பில் ஒரே ஒரு இன்ஸ்பெக்டர் மீது மட்டும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கரூர் சம்பவத்தில் சிபிஐ விசாரணையை உயர் நீதிமன்ற நீதிபதி மேற்பார்வையில் நடத்துவதுபோல், இந்த விவகாரத்திலும் சிபிஐ விசாரணையை உச்சநீதிமன்றம் அல்லது உயர் நீதிமன்ற நீதிபதி தலைமையில் கண்காணிக்க உத்தரவிட வேண்டும்” என்றனர்.

இதைத்தொடர்ந்து நீதிபதிகள், மதுரை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நிலுவையில் உள்ளது. எனவே, இந்த நிலையில் எந்த உத்தரவும் பிறப்பிக்க இயலாது எனக் கூறி விசாரணையை தள்ளி வைத்தனர்.

தாராபுரத்தில் ரூ.60 லட்சம் வெள்ளி, பணம் சிக்கியது

தேர்தல் பறக்கும்படை பறிமுதல்

தாராபுரம், செப். 11: திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் அக்.6ம் தேதி இடைத்தேர்தல் நடைபெறுகிறது. இதனால், நேற்று மாலை தாராபுரம் உடுமலை சாலை தனியார் பள்ளி அருகே பறக்கும் படையினர் அந்த வழியாக வந்த காரை சோதனை செய்தனர்.

அதில், 557 கிலோ கிராம் எடை கொண்ட வெள்ளிக் கட்டிகள் 14 பெட்டிகளில் இருந்ததை கண்டுபிடித்தனர். இது குறித்து காரில் வந்தவரிடம் போலீசார் நடத்திய விசாரணையில், ராஜஸ்தான் மாநிலம் மகாதேவ் மாவட்டம் பள்ளி கிராமத்தை சேர்ந்த நகைப்பட்டறை உரிமையாளர் மகாவீர் சிங் (40) என தெரிய வந்தது. இவர், நேற்று முன்தினம் தாராபுரம், உடுமலை பகுதியில் வெள்ளிக்கட்டிகளை கொள்முதல் செய்ய வந்ததாக தெரிவித்தார். கொள்முதல் செய்த வெள்ளிக்கட்டிகளுக்கு உரிய ஆவணங்கள் இல்லாததால் தேர்தல் பறக்கும் படையினர் அவற்றை பறிமுதல் செய்தனர்.

இதேபோல், தாராபுரம் உடுமலை சாலையில் உடுமலை சிவசக்தி காலனியை சேர்ந்த ஆட்டு வியாபாரி தங்கவேல் (65), என்பவர் வந்த காரை வழிமறித்து காரில் மறைவான இடத்தில் வைத்திருந்த ரூ.2 லட்சத்து 45 ஆயிரம் ரொக்க பணத்தை பறிமுதல் செய்தனர். இதைத்தொடர்ந்து, தாராபுரம் குண்டடம் பிரிவில் திண்டுக்கல்லை சேர்ந்த கார்த்திகேயன் (40) என்பவரின் காரில் வைத்திருந்த பையை சோதனை செய்ததில் ரூ.1.75 லட்சம் இருந்தது. இதற்கு உரிய ஆவணங்கள் இல்லாததால் பணத்தை பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர்.

அசெட்ஸ் கேர் & ரீகன்ஸ்ட்ரக்சன் எண்டர்பிரைசஸ் லிமிடெட்
அலுவலக எண். 101, கல்பதரு இன்பினியா, மனை பி, கிராண்ட் ஹையாட் அருகில், சாந்தாக்ரூஸ் (கிழக்கு), மும்பை – 400 055

அசையாச் சொத்து விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) மற்றும் விதி 9(1)–இன் விதியுடன் அசையா சொத்துகள் விற்பனைக்கான மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு.

பொதுமக்களுக்கும், குறிப்பாக **ஸ்டீபன்ராஜ் முனுசாமி (கடன்தாரர்)** மற்றும் **லோகேஸ்வரி ஸ்டீபன்ராஜ் (உப கடன்தாரர்)** ஆகியோருக்கும் இதன்மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தானது, **ஏசிஆர்இ–80–ட்ரஸ்ட் [CIN: U65993DL2002PLC115769] ("கடனீட்டு கடனீந்தோர்")**–இன் அறங்காவலராகச் செயல்படும் அசெட்ஸ் கேர் & ரீகன்ஸ்ட்ரக்சன் எண்டர்பிரைஸ் லிமிடெட்டுக்கு அடமானம் வைக்கப்பட்டு, அதன் நேரடி சுவாதீனமானது கடனீட்டு கடனீந்தோரின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் மேற்கொள்ளப்பட்டது. **16 அக்டோபர் 2026 அன்று பிற்பகல் 02:30 மணி முதல் 03.30 மணி வரை "உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ளது எதுவோ அது" அடிப்படையில் என்ற அடிப்படையில் ஸ்டீபன்ராஜ் முனுசாமி (கடன்தாரர்) மற்றும் லோகேஸ்வரி ஸ்டீபன்ராஜ் (உப கடன்தாரர்) ஆகியோரிடமிருந்து கடனீட்டு கடனீந்தோருக்குச் செலுத்த வேண்டிய நிலுவையில் உள்ள அசல், பாக்கிகள் (சேர்ந்த தாமதக் கட்டணங்கள் உட்பட) மற்றும் 31.08.2026 வரையிலான வட்டி ஆகியவற்றுக்காக, 01.09.2026 தேதியின்படி எதிர்கால வட்டியுடன் கூடிய ரூ.34,17,048/– (ரூபாய் முப்பத்து நான்கு லட்சத்து பதினேழாயிரத்து நாற்பத்து எட்டு மட்டும்) தொகையை அதனுடன் சட்டச் செலவுகள் மற்றும் பிற கட்டணங்களுடன் சேர்த்து வசூலிப்பதற்காக** விற்பனை செய்யப்படும்.

மேற்கண்ட கடன் கணக்கு **எண். LCHESTH0000085851**–உடன் தொடர்புடைய அனைத்து உரிமைகள், தலைப்பு(கள்), பயன்(கள்), அடிப்படைக் கடனீடு(கள்), அடமானங்கள் மற்றும்/அல்லது உத்தரவாதங்கள், அசையாச் சொத்து உட்பட, நிடோ ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட் (முன்னர் எடெல்வைஸ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் என அறியப்பட்டது) நிறுவனத்தால், ஏசிஆர்இ–80–ட்ரஸ்ட்டின் அறங்காவலராகச் செயல்படும் அசெட்ஸ் கேர் & ரீகன்ஸ்ட்ரக்ஷன் எண்டர்பிரைஸ் லிமிடெட் (ACRE/ கடனீட்டு கடனீந்தோர்) நிறுவனத்திற்குச் சாதகமாக, 28.06.2024 தேதியிட்ட மற்றும் 28.06.2024 அன்று பதிவு செய்யப்பட்ட ஒதுக்கீட்டு ஒப்பந்தத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம், கடனீட்டு கடனீந்தோர் நிதி வசதியை முறையாக தன் கீழ் கொண்டுள்ளார். எனவே, கடன் ஒப்பந்தம்(கள்) மற்றும் பிற தொடர்புடைய கடன் ஆவணம்(கள்) ஆகியவற்றின்படி தனது நிலுவைத் தொகையை வசூலிக்கவும் மற்றும்/அல்லது அடமானம் வைக்கப்பட்ட சொத்து தொடர்பான பாதுகாப்பு நலனை அமல்படுத்தவும் அனைத்து அதிகாரங்களும் அவருக்கு வழங்கப்பட்டுள்ளன.

அசையாச் சொத்தின் நிர்ணய விலை ரூ.17,62,200/– (ரூபாய் பதினேழு லட்சத்து அறுபத்து இரண்டாயிரத்து இருநூறு மட்டும்) ஆகும். முன்பண வைப்புத்தொகை (EMD) ரூ.1,76,220/– (ரூபாய் ஒரு லட்சத்து எழுபத்து ஆறாயிரத்து இருநூற்று இருபது மட்டும்) ஆகும்; இது குறைந்தபட்ச ஏல விலையில் 10%–க்குச் சமமாகும்.

அசையா சொத்தின் விவரங்கள்

சென்னை மாவட்டம், திருவொற்றியூர் வட்டம், சடையன்குப்பம் கிராமம், EWS "A" வகை வீடு மற்றும் வளாகம் கொண்ட நிலம்; மனை எண். 2/309, மணலி நிலை –II திட்டம், சடையன்குப்பம், சென்னை – 600103 (தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், மணலி நிலை –II திட்டம்). இந்நிலம் 432 சதுர அடி பரப்பளவு கொண்டது மற்றும் நகர சர்வே எண் பகுதியைக் கொண்டுள்ளது. இதன் எல்லைகள் பின்வருமாறு: வடக்கு: மனை எண்கள். 284 & 285; தெற்கு: 16 அடி அகலமுள்ள சாலை; கிழக்கு: மனை எண். 308; மேற்கு: மனை எண். 310. அளவீடு: கிழக்கு–மேற்காக வடக்குப்பக்கத்தில்: 12 அடி; கிழக்கு–மேற்காக தெற்கு பக்கத்தில்: 12 அடி; வடக்கு–தெற்காக கிழக்குப்பக்கத்தில்: 36 அடி; வடக்கு–தெற்காக மேற்குப்பக்கத்தில்: 36 அடி. வட சென்னை பதிவு மாவட்டம் :மற்றும் திருவொற்றியூர் துணைப் பதிவு மாவட்ட எல்லைக்குள் இந்தச் சொத்து அமைந்துள்ளது.

விற்பனை தொடர்பான விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடனீட்டு கடனீந்தோரின் இணையதளமான www.acreindia.com**–இல் உள்ள இணைப்பைப் பார்க்கவும்; தொடர்பு எண்கள்: 9962784954 / 9967280448.**

தேதி: 09.09.2026
இடம்: மும்பை

ஒம்/– அதிகாரப்பூர்வ அதிகாரி
அசெட்ஸ் கேர் & ரீகன்ஸ்ட்ரக்சன் எண்டர்பிரைஸ் லிமிடெட்
ஏசிஆர்இ–80–ட்ரஸ்ட்டின் அறங்காவலர்

பஞ்சாப் & சிந்த் வங்கி

(A Govt. of India undertaking) ARMB சென்னை, முதல் தளம், ஸ்பென்சர் பிளாசா, 770-A,
அண்ணாசாலை, சென்னை 600002. போன்:044-28492888, மின்னஞ்சல் : C0765@psb.bank.in

[பிற்சேர்க்கை-IV-A] அசையா சொத்துக்களின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம், மற்றும் உரிமை அமலாக்கச் சட்டம் 2002, விதி 8(6) இன் கீழ் அசையாச் சொத்துக்களை விற்பனை அறிவிப்பு. இந்த அறிவிப்பு, சட்டபூர்வமான பிணைக்காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ஆண்டு விதி 8 & 9ன் கீழ் கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்கள் (சட்டப்பூர்வ வாரிசுதாரர்கள்) 15 நாட்கள் சட்டப்பூர்வ விற்பனை அறிவிப்பாகும்.

இதன் மூலம் பொதுவாக பொதுமக்களுக்கும் குறிப்பாக கடன்தாரர்கள், அடமானதாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்கள் ஆகியோர்களுக்கு கடன் அளித்தவருக்கு (பஞ்சாப் & சிந்த் வங்கி – Holding First Charge) அடமானம் செய்யப்பட்டுள்ள கீழே குறிப்பிட்டுள்ள அசையா சொத்துக்களை அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அடையாளபூர்வ/மெய்நிலை சுவாதீனம் எடுத்ததை தொடர்ந்து கீழே குறிப்பிட்ட கடன் கணக்கிலிருந்து மீட்கப்பட வேண்டிய நிலுவைத் தொகையினை வசூலிக்கும் பொருட்டு இந்த சொத்துக்கள் “எங்கு உள்ளதோ அப்படியே” “எப்படி உள்ளதோ அப்படியே” மற்றும் “என்ன இருக்கிறதோ அதே நிலையில்” கீழே குறிப்பிட்டுள்ள தேதியில் விற்கப்படும் என்று இதன் மூலம் அறிவிப்பு வெளியிடப்படுகிறது. **கடன்தாரர்(கள்)/ அடமானதாரர்(கள்)/ ஜாமீன்தாரர்(கள்)** விவரம், நிலுவைத் தொகை, சொத்து விவரம், குறைந்தபட்ச கேட்பு விலை, மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம், டேவணித் தொகை மற்றும் ஏல உயர்வு தொகை ஆகியவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

வ.எண்.1: கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள் பெயர் மற்றும் முகவரி: (1) மறைந்த **திரு. ரூபேஷ் பரஷ்மல்** (கடன்தாரர்), அவர்களின் சட்டபூர்வ வாரிசுதாரர்கள் (தெரிந்தும் மற்றும் தெரியாமலும்) எண்.27/18, Dr. இராதாகிருஷ்ணன் சாலை, விவேகானந்தா நகர், கொடுங்கையூர், சென்னை -600118. **(2) Ms. சோனாள் R லோதா** (ஜாமீன்தாரர்) எண்.27/18, Dr. இராதாகிருஷ்ணன் சாலை, விவேகானந்தா நகர், கொடுங்கையூர், சென்னை -600118.

பிரிவு 13 (2)இன் கீழ் கோரிக்கை அறிவிப்பு தேதி **05.12.2018**, தொகை: **ரூ.40.06** இலட்சம்

தற்போதைய நிலுவை தொகை : **31.08.2026:** அன்றுள்ளபடி **ரூ.79,43,012.77** மற்றும் செலவு, கட்டணங்கள், எதிர்கால வட்டி உட்பட. சுவாதீன நிலை: **மெய்நிலை சுவாதீனம்.**

வங்கிக்கு தெரிந்தவரை வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின் அதனுடன் அசையா சொத்தின் விரிவான விவரங்கள்: அட்டவணை A: தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் கூடுவாஞ்சேரி சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், எண்.193 ஆதனூர் கிராமத்தின் சர்வே எண்.379/1, 06.06.2012 தேதியிட்ட ஸ்ரீபெரும்புதூர், துணை வட்டாட்சியர் அவர்களால் வழங்கப்பட்ட பட்டா எண்.5468 இன்படி R.சர்வே எண்.379/23 இல் அமைந்துள்ள பரப்பளவு 1415ச.அடி விஸ்தீரணங்கொண்ட வீட்டு மனை அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, கட்டிடத் திட்ட அனுமதி எண்.93/12-13, நிலத்தின் **எல்லைகள்:** வடக்கில்: ஸ்ரீராம் நகர்; மேற்கில்: திரு. M. தேவதாஸ் அவர்களின் எஞ்சியுள்ள நிலம்; கிழக்கில்: சாலை; தெற்கில்: சாலை; அனைத்தின் கூட்டுப்பரப்பளவு மொத்த விஸ்தீரணம் 1415ச.அடி. **அட்டவணை B:** குறிப்பிடப்பட்ட அட்டவணை A சொத்தில் பிரிக்கப்படாத பங்கு 566ச.அடி நிலம், ஸ்ரீ சாரா பில்டர்ஸ் என்ற பெயரில் உள்ள கட்டிடத்தின் (பொதுப் பரப்பு உட்பட) முதல் தளம் மற்றும் இரண்டாம் தளங்களில் முறையே ஃப்ளாட் எண்.F1 & S1, ஆகியவற்றின் மொத்த அடித்தளப்பரப்பு 1242 ச.அடி. 19.06.2017 தேதியிட்ட விற்பனை ஆவண எண்.5873/2017, 19.06.2017 தேதியிட்ட கூடுவாஞ்சேரி SRO-வில் பதிவு செய்யப்பட்ட கட்டுமான ஒப்பந்த ஆவண எண்.5872/2017 ஆகியவற்றில் அடங்கியது.

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 28.00 லட்சம்	டேவணித் தொகை₹ 2.80 லட்சம்	ஏல உயர்வு தொகை₹ 0.50 லட்சம்

வ.எண்.2: கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள் பெயர் மற்றும் முகவரி: 1. திரு.K.நாகராஜன், எண்.12, பாரதி நகர் 2வது தெரு, வில்லிவாக்கம் சென்னை -600049. **2. திருமதி P.லலிதா** 33/1, கலைவாணர் நகர், பிரதான சாலை, அம்பத்தூர் (பாடி) சென்னை - 600050

பிரிவு 13 (2)இன் கீழ் கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் தொகை: தேதி : **12.11.2015**, தொகை: **ரூ.24.08** லட்சம்

தற்போதைய நிலுவை தொகை : **31.08.2026:** அன்றுள்ளபடி **ரூ.79,48,623.56** மற்றும் செலவு, கட்டணங்கள், எதிர்கால வட்டி உட்பட. சுவாதீன நிலை: **மெய்நிலை சுவாதீன**

வங்கிக்கு தெரிந்தவரை வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின் அதனுடன் அசையா சொத்தின் விரிவான விவரங்கள்: ஃப்ளாட்டின் விளக்கம்: “திருவள்ளூர் – 602025, செவ்வாப்பேட்டை, கங்கா நகர், மனை எண்.224, இல் அமைந்துள்ள SRO திருவள்ளூரில் 28-05-2014 தேதியிட்டு பதிவு செய்யப்பட்ட ஆவண எண்.6158/2014 இன்படி திரு. K. நாகராஜன் அவர்களின் பெயரில் உள்ள (பிரிக்கப்படாத பங்கு 305சதுர அடி நிலம்), KAS ரிவர் வியூ அப்பார்ட்மென்ட், தரை தளத்தில் பரப்பளவு 825சதுர அடி கொண்ட ஃப்ளாட் எண்.**G-1” அட்டவணை A:** திருவள்ளூர் மாவட்டம் & வட்டம், எண்.92, செவ்வாப்பேட்டை கிராமத்தின், சர்வே எண்.101/1, 102/1, 103, 104, 105, 123/2, 125, 126/1, பட்டா எண்.315 மற்றும் புதிய துணைப்பிரிவு சர்வே எண்.101/1 & 101/1B இல் அடங்கிய எண்.N.C.S.,D.T.P.M.87/373 இன்படி அங்கீகாரம்பெற்ற மனைப்பிரிவு கங்கா நகர், மனை எண்.224 இன் பரப்பளவு 2361சதுர அடி விஸ்தீரணங்கொண்ட நிலம். **எல்லைகள்:** வடக்கில்: மனை எண்.223, தெற்கில்: காலி நிலம், கிழக்கில்: திரு. கிருஷ்ணன் அவர்களின் வீடு, மேற்கில்: 30அடி அகல தெரு. **நாற்பரப்புகள்:** கிழக்கு மேற்காக வட புறம் 68அடி, தென் புறம் 73அடி; வடக்குத் தெற்காக கிழக்கு புறம் 32அடி, மேற்கு புறம் 35அடி. அனைத்தின் கூட்டுப்பரப்பளவு 2361சதுர அடி. அட்டவணை B: 2361சதுர அடியில் பிரிக்கப்படாத (UDS) பங்கு பரப்பளவு **305சதுர அடி** விஸ்தீரணங்கொண்ட நிலம் அதனுடன் அதில் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் தரை தளத்தில் பரப்பளவு 825சதுர அடி சூப்பர் கட்டிடப்பரப்பு கொண்ட கட்டிடம் ஃப்ளாட் எண்/கதவு எண்: “G1” . எண்.92, செவ்வாப்பேட்டை கிராம ஊராட்சி எல்லைகளுக்குட்பட்டு அமைந்துள்ள சொத்து.

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 20.70 லட்சம்	டேவணித் தொகை₹ 2.07 லட்சம்	ஏல உயர்வு தொகை₹ 0.50 லட்சம்

வ.எண்.3: கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்கள் பெயர் மற்றும் முகவரி: (1) திரு. P.மோகன் த/பெ. திரு.பஞ்சாட்சரம், ஃப்ளாட் எண்.F-2, முதல் தளம், பிளாக்-C, V. M. நிவாஸ் அப்பார்ட்மென்ட்ஸ், 17வது தெரு, பாலாஜி நகர், அனகாபுத்தூர், சென்னை - 600 070. மேலும் ஒரு முகவரி: **திரு. P.மோகன்** த/பெ. திரு.பஞ்சாட்சரம், எண்.44, பேட்டைத் தெரு, அனகாபுத்தூர், சென்னை - 600 070. **2) திரு. பஞ்சாட்சரம்.D,** ஃப்ளாட் எண்.F-2, முதல் தளம், பிளாக்-C, V. M. நிவாஸ் அப்பார்ட்மென்ட்ஸ், 17வது தெரு, பாலாஜி நகர், அனகாபுத்தூர், சென்னை - 600 070, **மேலும் ஒரு முகவரி: திரு.பஞ்சாட்சரம்.D,** எண்.44, பேட்டைத் தெரு, அனகாபுத்தூர், சென்னை - 600 070,

பிரிவு 13 (2)இன் கீழ் கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் தொகை: தேதி : **02.05.2025**, தொகை: **ரூ.73.59** லட்சம்

தற்போதைய நிலுவை தொகை : **31.08.2026:** அன்றுள்ளபடி **ரூ.83,54,840.49** மற்றும் செலவு, கட்டணங்கள், எதிர்கால வட்டி உட்பட. சுவாதீன நிலை: **அடையாளபூர்வ** சுவாதீன தேதி: **23.07.2025**

வங்கிக்கு தெரிந்தவரை வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின் அதனுடன் அசையா சொத்தின் விரிவான விவரங்கள்: தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் பம்மல் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, காஞ்சிபுரம் மாவட்டம், பல்லாவரம் வட்டம், பழைய கிராம எண்.99,87, புதிய கிராம எண்.1 , அனகாபுத்தூர் கிராமத்தின் பழைய சர்வே எண்.158/2, பட்டா எண்.3253 இன்படி புதிய சர்வே எண்.158/2A2 இல் அடங்கிய பாலாஜி நகர், 17வது தெரு, மனை எண்.1-A இன் மொத்தப் பரப்பளவு 1800சதுர அடியில் பிரிக்கப்படாத பங்கு 420சதுர அடி நிலம் அதனுடன் அதில் கட்டப்பட்டுள்ள “V.M.நிவாஸ்” என்ற பெயரில் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் பொதுப்பரப்பு உட்பட தரை தளத்தில் உள்ள ஒரு கார் நிறுத்தும் இடம் பிளாக்-C, முதல் தளத்தில் பரப்பளவு 750சதுர அடி அடித்தளப்பரப்பு கொண்ட ஃப்ளாட் எண்.F-2, நிலம் அதனுடன் கட்டிடம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, அதனுடன் அனைத்து பொருத்திகள் & அமைப்புகள், மின்சார பொருத்திகள், TNEB சேவை இணைப்புகள் அதனுடன் வைப்புநிதிகள் மற்றும் கட்டிடத்தில் இணைக்கப்பட்டுள்ள அனைத்து வசதிகள் உட்பட. சொத்தின் **எல்லைகள்:** வடக்கில்: மனை எண்.1-B; மேற்கில்: மனை எண்.2, கிழக்கில்: 20அடி சாலை; தெற்கில்: சர்வே எண்.158/3 இன் நிலம். **நாற்பரப்புகள்:** கிழக்கு மேற்காக வட புறம் 50அடி; கிழக்கு மேற்காக தென் புறம் 50அடி, வடக்குத் தெற்காக கிழக்கு புறம் 36அடி; வடக்குத் தெற்காக மேற்கு புறம்: 36அடி. மொத்தப் பரப்பளவு 1800சதுர அடியில் பிரிக்கப்படாத பங்கு 420சதுர அடி நிலம் அதனுடன் அதில் கட்டப்பட்டுள்ள “V.M.நிவாஸ்” என்ற பெயரில் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் தரை தளத்தில் உள்ள ஒரு கார் நிறுத்தும் இடம் பிளாக்-C, முதல் தளத்தில் பரப்பளவு 750சதுர அடி அடித்தளப்பரப்பு கொண்ட ஃப்ளாட் எண்.F-2. (04.11.2016 தேதியிட்ட விற்பனை ஆவண எண்.7294/2016.)

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 28.00 லட்சம்	டேவணித் தொகை₹ 2.80 லட்சம்	ஏல உயர்வு தொகை₹ 0.50 லட்சம்

வ.எண்.4: கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்கள் பெயர் மற்றும் முகவரி: **(1) M/s Akila Trading Corporation,** # 5/625, இராதிகா அப்பார்ட்மென்ட்ஸ், முதல் குறுக்குத் தெரு, விக்னராஜபுரம், வேங்கைவாசல், மேடவாக்கம், சென்னை - 600100. **(2) திரு. A. குமார் (M/s Akila Trading Corporation- இன் பங்குதாரர்),** த/பெ. திரு. K. ஆறுமுகம், வில்லா.21, ஈஷா சிக்னேச்சர் வில்லா, பெரும்பாக்கம், சென்னை - 600100. **(3) திரு. N. C. ஜித்தேந்த்ரா (M/s Akila Trading Corporation- இன் பங்குதாரர்)** த/பெ. திரு. N. V. சக்கரபாணி, **(4) திருமதி. N. C. மோகனபிரியா (ஜாமீன்தாரர்),** த/பெ. திரு. N. V. சக்கரபாணி, இருவரின் முகவரி : #43, வெள்ளாளர் தெரு, ஆதம்பாக்கம், சென்னை - 600088

பிரிவு 13 (2)இன் கீழ் கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் தொகை: தேதி : **21.02.2019**, தொகை: **ரூ.389.83** லட்சம்

தற்போதைய நிலுவை தொகை : **31.08.2026** அன்றுள்ளபடி **ரூ.7,24,28,218.42/-** மற்றும் செலவு, கட்டணங்கள், எதிர்கால வட்டி உட்பட. சுவாதீன நிலை: **அடையாளப்பூர்வ** சுவாதீன தேதி: **07.05.2019**

வங்கிக்கு தெரிந்தவரை வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின் அதனுடன் அசையா சொத்தின் விரிவான விவரங்கள்: சொத்து 1 இன் அட்டவணை A: காஞ்சிபுரம் மாவட்டம், தற்போது ஆலந்தூர் வட்டம், ஆதம்பாக்கம் கிராமத்தின் சர்வே எண். 206/1, வார்டு எண்.G, பிளாக் எண்:14, T. சர்வே எண்.33, இல் அடங்கிய கரிகாலன் தெரு என்ற பெயரில் உள்ள, வெள்ளாளர் தெரு, கதவு எண்:43, இல் அமைந்துள்ள சொத்தின் விஸ்தீரணம் 5376ச.அடி, அதில் கட்டப்பட்டுள்ள (ஆலந்தூர் நகராட்சி, ஆணையருக்கு, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் உறுப்பினர் செயலாளர் வழங்கிய 14.10.2008 தேதியிட்டு வழங்கிய கட்டிட அங்கீகாரத் திட்ட அனுமதி எண்:371/2008,B.A. எண்:523/2008) திட்டத்தின்படி தற்போதுள்ள கட்டிடத்தின் பரப்பு தரை தளம் 2729ச.அடி, முதல் தளம் 2187ச.அடி. அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி. நிலத்தின் **எல்லைகள்** பின்வருமாறு: வடக்கில்: திருமதி. புஷ்பவல்லியம்மாள் அவர்களின் சொத்து, தெற்கில்: திரு. பாகீரதி அம்மாள் அவர்களின் சொத்து, கிழக்கில்: திரு. துரைசுவாமி ரெட்டியார் அவர்களின் சொத்து, மேற்கில்: கரிகாலன் தெரு என்ற பெயரில் உள்ள, வெள்ளாளர் தெரு. **நாற்பரப்புகள்:** கிழக்கு மேற்காக வடபுறம்: 28 அடி, கிழக்கு மேற்காக தென்புறம்: 28 அடி, வடக்கு தெற்காக கிழக்குபுறம் 192 அடி, வடக்கு தெற்காக மேற்குபுறம்: 182 அடி. **சொத்து 1 இன் அட்டவணை B:** ஆலந்தூர் SRO-விற்குட்பட்ட 08.09.2017 தேதியிட்ட ஆவண எண்:4190/17, செல்வி. N.C. மோகனபிரியா அவர்களின் பெயரில் உள்ள அட்டவணை A ல் பிரிக்கப்படாத 1/2(அரை) பங்கு, அதனுடன் தரை தளத்தில் உள்ள 2729ச.அடி கட்டிடம் அதனுடன் அனைத்து TNEB சேவை இணைப்பு, வீட்டு வரி மதிப்பீடு, தண்ணீர் சேவை இணைப்பு, பொருத்திகள், அமைப்புகள்.

சொத்து 2 இன் அட்டவணை A: காஞ்சிபுரம் மாவட்டம், தற்போது ஆலந்தூர் வட்டம், ஆதம்பாக்கம் கிராமத்தின் சர்வே எண். 206/1, வார்டு எண்.G, பிளாக் எண்:14, T. சர்வே எண்.33, இல் அடங்கிய கரிகாலன் தெரு என்ற பெயரில் உள்ள, வெள்ளாளர் தெரு, கதவு எண்:43, இல் அமைந்துள்ள சொத்தின் விஸ்தீரணம் 5376ச.அடி, அதில் கட்டப்பட்டுள்ள (ஆலந்தூர் நகராட்சி, ஆணையருக்கு, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் உறுப்பினர் செயலாளர் வழங்கிய 14.10.2008 தேதியிட்டு வழங்கிய கட்டிட அங்கீகாரத் திட்ட அனுமதி எண்:371/2008,B.A. எண்:523/2008) திட்டத்தின்படி தற்போதுள்ள கட்டிடத்தின் பரப்பு தரை தளம் 2729ச.அடி, முதல் தளம் 2187ச.அடி. அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி. நிலத்தின் **எல்லைகள்** பின்வருமாறு: வடக்கில்: திருமதி. புஷ்பவல்லியம்மாள் அவர்களின் சொத்து, தெற்கில்: திரு. பாகீரதி அம்மாள் அவர்களின் சொத்து, கிழக்கில்: திரு. துரைசுவாமி ரெட்டியார் அவர்களின் சொத்து, மேற்கில்: கரிகாலன் தெரு என்ற பெயரில் உள்ள, வெள்ளாளர் தெரு. **நாற்பரப்புகள்:** கிழக்கு மேற்காக வடபுறம்: 28 அடி, கிழக்கு மேற்காக தென்புறம்: 28 அடி, வடக்கு தெற்காக கிழக்குபிறம்ள் 192 அடி, வடக்கு தெற்காக மேற்குபுறம்: 182 அடி. **சொத்து 2 இன் அட்டவணை B:** ஆலந்தூர் SRO-விற்குட்பட்ட 08.09.2017 தேதியிட்ட ஆவண எண்:4191/17, திரு. N. C. ஜித்தேந்த்ரா அவர்களின் பெயரில் உள்ள அட்டவணை A ல் பிரிக்கப்படாத 1/2(அரை) பங்கு, அதனுடன் தரை தளத்தில் உள்ள 2187ச.அடி கட்டிடம் அதனுடன் அனைத்து TNEB சேவை இணைப்பு, வீட்டு வரி மதிப்பீடு, தண்ணீர் சேவை இணைப்பு, பொருத்திகள், அமைப்புகள்.

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 697.00 லட்சம்	டேவணித் தொகை₹ 69.70 லட்சம்	ஏல உயர்வு தொகை₹ 6.00 லட்சம்

வங்கிக்கு தெரிந்தவரையில் வில்லங்கங்கள்: அங்கீகரிக்கப்பட்ட அலுவலருக்குத் தெரிந்தவரையில் மற்றும் தகவலின்படி, மேலே குறிப்பிட்டுள்ளதைத் தவிர, எந்தச் சொத்தின் மீதும் எந்த வில்லங்கங்களும். எவ்வாறாயினும், ஏலதாரர்கள் தங்கள் ஏலத்தைச் சமர்ப்பிப்பதற்கு முன், ஏலத்தில் விடப்பட்ட சொத்துக்கள்/ஏலங்கள் மற்றும் உரிமைகோரல்கள்/உரிமைகள்/ நிலுவைத் தொகைகள்/ சொத்துக்களை ஆகியவை குறித்து தாங்களே விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். மின் ஏல விளம்பரமானது வங்கியின் எந்தவொரு அர்ப்பணிப்பையும் அல்லது பிரதிநிதித்துவத்தையும் கொண்டதாகக் கருதப்படாது. வங்கிக்குத் தெரிந்தோ தெரியாமலோ இருக்கும் மற்றும் எதிர்கால வில்லங்கங்களுடன் சொத்து விற்கப்படுகிறது. அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி / கடன் வழங்கியவர் எந்தவொரு மூன்றாம் நபரின் உரிமைகோரல்கள் / உரிமைகள் / பாக்கிகளுக்கு எந்த வகையிலும் பொறுப்பேற்கமாட்டார்.

மின் ஏல தேதி மற்றும் நேரம்: 28.09.2026 அன்று நண்பகல் 12 மணி முதல் பகல் 2 மணி வரை

டேவணித் தொகை சமர்ப்பிக்கும் கடைசி தேதி மற்றும் நேரம்	**25.09.2026 அன்று பிற்பகல் 3 மணி வரை**
சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம்	**23.09.2026 அன்று காலை 11 மணி முதல் பிறபகல் 3 மணி வரை**

ஆன்லைன் மின்ஏலம் வழங்கப்பட்ட தேதி மற்றும் நேரத்தில் https://baanknet.com/ தளம் மூலம் நடத்தப்படும், ஏதேனும் சந்தேகங்களுக்கு 8291220220 & மின்னஞ்சல்: support.BAANKNET@psballiance.com தொடர்பு கொள்ளவும்.

மேலும் விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை https://baanknet.com/ மற்றும் https://www.psbindia இல் காணலாம். மேலும் விவரங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை 9895249904 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

இடம்: சென்னை; நாள்: 08.09.2026
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, பஞ்சாப் & சிந்து வங்கி

பிற்சேர்க்கை IV–ஏ
அசையாச் சொத்துக்களுக்கான விற்பனை அறிவிப்பு

ஜாமீன் பெறுதல் மற்றும் நிதிச் சொத்துக்களை மறுகட்டமைப்புச் செய்தல் மற்றும் ஜாமீன் நலன் அமலாக்கச் சட்டம், 2002-ன் கீழாக அசையாச் சொத்துக்களை ஈ-ஏல விற்பனைஅறிவிப்பு மற்றும் ஜாமீன் நலன் (அமலாக்க) விதிமுறைகள், 2002-ன் விதி 8(6) அதன் விதிமுறைகளுடன் சேர்த்துப் படிக்கவும்.

கீழே விவரிக்கப்பட்டுள்ள ஜாமீன் பெற்ற கடன் நிறுவனத்திற்கு ஈடுவைக்கப்பட்ட/ஒப்படைக்கப்பட்ட அசையாச் சொத்தை (ஜாமீன் பெற்ற கடன் நிறுவனம்) **சம்மான் ஃபின்சர்வ் லிமிடெட் (முன்னர் இந்தியாபுல்ஸ் கமர்சியல் கிரெடிட் லிமிடெட் என்று அழைக்கப்பட்டது)-ன் [CIN : U65923DL2006PLC150632]** (‘‘செக்யூர்ட் கிரெடிட்டர்’’) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, **ஆக்கபூர்வமா கையகப்படுத்தியுள்ளார்** என்பது இதன் மூலமாக பொது மக்களுக்கும் குறிப்பாக கடன் பெற்றவருக்கும்(கள்) ஜாமீன்தாரருக்கும்(கள்) இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. இது **பி. ராஜேஸ்வரி (உரிமையாளர், தி கிராண்ட் ஸ்வீட்ஸ் அண்ட் ஸ்நாக்ஸ்), பி. ஆர். பிரியங்கா என்ற பிரியங்கா மதன் மற்றும் ஞானசேகரன் மதன் என்ற மதன் ஞானசேகரன்** ஆகியோர் ஜாமீன் பெற்றகடன் வழங்குபவருக்கு செலுத்த வேண்டிய **01.09.2026**-லிருந்து கடன் ஒப்பந்தம் விதிமுறைகளின்படி, சட்ட செலவுகள் மற்றும் பிற கட்டணங்களுடன் **31.08.2026** தேதிவரை **கடன்கணக்கு எண். HLLAVLC00372735** -ன் மீதாக **ரூ. 15,47,22,134/- (ரூபாய் பதினைந்து கோடியே நாற்பத்தேழு லட்சத்து இருபத்து இரண்டாயிரத்து நூற்று முப்பத்து நான்கு மட்டும்)** மற்றும் **கடன்கணக்கு எண். HLLACHE00505753** -ன் மீதாக **ரூ. 1,53,81,204/- (ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்து மூன்று லட்சத்து எண்பத்து ஒரு ஆயிரத்து இருநூற்று நான்கு மட்டும்)** என மொத்தம் **ரூ. 17,01,03,338/- (ரூபாய் பதினேழு கோடியே ஒரு லட்சத்து மூவாயிரத்து முந்நூற்று முப்பத்தெட்டு மட்டும்)** நிலுவை அசல், பாக்கிகள் (தாமதகட்டணம் உட்பட) மற்றும் வட்டியை வசூலிப்பதற்காக **14.10.2026**-ம் தேதி **மாலை 05.00 முதல் மாலை 06.00 வரை ‘‘எங்கிருக்கிறதோ அங்கு’’, ‘‘உள்ளது உள்ளபடி’’ மற்றும் ‘‘எதுவாக இருந்தாலும்’’** விற்பனை செய்யப்படும்.

அசையாச் சொத்துக்கான ஏல மதிப்பு **ரூ. 23,63,00,000/- (ரூபாய் இருபத்து மூன்று கோடியே அறுபத்து மூன்று லட்சம் மட்டும்)** ஆக இருக்கும் மற்றும் செலுத்த வேண்டிய வைப்புத் தொகை (‘‘ஈஎம்டி’’) ஏல மதிப்பில் 10%-க்குச் சமமான அதாவது **ரூ. 2,36,30,000/- (ரூபாய் இரண்டு கோடியே முப்பத்தாறு லட்சத்து முப்பது ஆயிரம் மட்டும்)** ஆகும்.

அசையா சொத்தின் விவரம்:

டி. எஸ். எண் 65 **(பிடி)-ல்,** 6615 **சதுர அடி பரப்பளவு கொண்ட நிலம் கட்டிடத்துடன்; பிளாக் எண்** 37 **மற்றும்** 1220 **சதுர அடி பரப்பளவு கொண்ட நிலம், டி. எஸ். எண்** 70**-ல் உள்ள கட்டிடத்துடன், பிளாக் எண்** 37**, கதவு எண்** 24**-ல், புதிய எண்** 49 **(பகுதி), கிழக்கு திசை; அடையார் துணைப் பதிவு மாவட்டம், சென்னை தெற்கு பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது, காந்தி நகர், இரண்டாவது பிரதான சாலை, கோட்டூர் கிராமத்தில், சைதாப்பேட்டை வட்டம், சென்னை-**600020**, தமிழ்நாடு மற்றும் பின் வரும் எல்லைகளைக் கொண்டது:**

வடக்கில்	:	**இரண்டாவது பிரத ான சாலை, காந்தி நகர்;**
கிழக்கில்	:	**திருமதி நீலா ராமகிருஷ்ணனின் வீடு;**
தெற்கில்	:	**பழைய எண்.** 23 **கொண்ட வீடு, இரண்டாவது பிரதான சாலை, காந்தி நகர்;**
மேற்கில்	:	**திருமதி ஜி. ரங்கநாயகிக்கு ஒதுக்கப்பட்ட அட்டவணை சொத்தின் ஒரு பகுதி.**

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, ஜாமீன் பெற்ற கடன் நிறுவனத்தின் இணையதளம், அதாவது கொடுக்கப்பட்டுள்ள www.sammaanfinserve.com என்ற இணைப்பில் பார்க்கவும். தொடர்பு எண் : 0124-6910910, +91 7065451024; மின்னஞ்சல் முகவரி: auctionhelpline@sammaancapital.com. ஏலத்திற்கு, வருகை தரவும் www.auctionfocus.in.

எஸ்டி/–
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
சம்மான் ஃபின்சர்வ் லிமிடெட்
(முன்னர் இந்தியாபுல்ஸ் கமர்சியல் கிரெடிட் லிமிடெட் என்று அழைக்கப்பட்டது)

தேதி : 02.09.2026
இடம் : சென்னை